செ.வெ.எண்: 1001 17.11.08

**தமிழகத்தில் 1500 டன் பட்டு உற்பத்தி செய்து சாதனை !**
**தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறை !**
**கீரிஸ் நாடு ஏத்தன்ஸ் நகரில் நடைபெற்ற 21வது பண்ணாட்டு பட்டு வளர்ச்சி மாநாட்டில் தமிழக பட்டுவளர்ச்சித்துறை ஆணையர் திரு.ஹர்மந்தர்சிங்,இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று தகவல்!**

* * * * * *

கீரிஸ் நாடு ஏத்தன்ஸ் நகரில் கடந்த 3.11.2008 முதல் 7.11.2008 தேதி வரை நடைபெற்ற 21வது பண்ணாட்டு பட்டு வளர்ச்சி மாநட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் பட்டு வளர்ச்சித்துறை ஆணையர் திரு.ஹர்மந்தர்சிங்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு 'தமிழகத்தில் பட்டு வளர்ச்சி விவசாயிகளின் பொருளாதார நிலை மேம்பாடு' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்து விளக்கவுரை ஆற்றினார்கள். தமிழகத்தின் சார்பில் பண்ணாட்டு அளவில் நடைபெறும் மாநாட்டில் முதன் முறையாக கலந்து கொண்ட ஆணையர் திரு.ஹர்மந்தர்சிங்,இ.ஆ.ப., அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழகத்தின் பட்டு வளர்ச்சித்துறையின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் பற்றியும் இந்திய அளவில் அதிக அளவில் பட்டு உற்பத்தி செய்யப்படுவது குறித்தும், அதிக தரம் வாய்ந்த பட்டு உற்பத்தி குறித்தும், கையாளப்படும் அதிநவீன தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள் குறித்தும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் இதை முறையாக விவசாயிகள் பயன்படுத்துவது குறித்தும், உற்பத்தி செய்யப்படும் பட்டு மற்றும் பட்டுப் பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்தும், அந்த அறிக்கையில் குறிப்பிட்டு பட்டுவளர்ச்சித்துறை ஆணையர் திரு.ஹர்மந்தர்சிங்,இ.ஆ.ப., அவர்கள் வீடியோ படக்கருவி மூலம் (Power Point Presentation) விளக்கவுரை ஆற்றினார்கள்.

மேலும் பட்டு உற்பத்தி பகுதிகளை அதிகமாக்குதல், பட்டுக் கூடு மற்றும் முட்டைகள் உற்பத்தி, பட்டு உற்பத்தி, பட்டு நெசவு ஆகியவற்றில் தமிழ்நாடு மிகப்பெரிய முன்னேற்றம் கட்டுள்ளதை இம்மாநாட்டில் கலந்து கொண்ட பண்ணாட்டு பிரதிநிதிகளும் பாராட்டினர். 2008–09 இந்த ஆண்டில் மட்டும் 1500 டன் பட்டு உற்பத்தி தமிழகத்தில் கிடைத்துள்ளது. தமிழக வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய சாதனையாகும். தொடர்ந்து பட்டு உற்பதியில் தமிழகம் முன்னனியில் விளங்கும் வகையில் பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு அதிநவீன தொழில்நுட்பங்களையும், வசதிவாய்ப்புகள் மற்றும் சலுகைகளையும் தமிழக அரசு வழங்கவுள்ளது என்று தமிழக பட்டு வளர்ச்சித்துறை ஆணையர் திரு.ஹர்மந்தர்சிங்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

* * * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9